செ.வெ.எண் : 17/ ஜனவரி நாள் : 19.01.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பொது சுகாதாரத்துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை இன்று (19.01.2020) துவக்கி வைத்தார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறு குழந்தைகளின் நலனை பாதுகாத்திடும் விதமாக பொது சுகாதாரத்துறையின் மூலம் மாவட்டம் முழுவதும் முகாம்கள் நடத்தி, போலியோ சொட்டு மருந்து வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணிகளுக்காக 1,229 போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 1,21,398 எண்ணிக்கையிலான 5-வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. மொத்தம் 4,192 பணியாளர்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல 27 சிறப்பு குழுக்கள் (பயணிகள் கூடும் இடத்தில்) மற்றும் 33 நடமாடும் குழுக்களாக அமைக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புகள் மற்றும் கோவில் திருவிழாக்கள், பேருந்து மற்றும் இரயில் நிலையங்கள், கல்யாண நிகழ்ச்சிகள், இலங்கை அகதிகள் முகாம் ஆகிய இடங்களில் உள்ள குழந்தைகளுக்கும் அலுவலர்கள் நேரடியாகச் சென்று போலியோ சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்கள் இந்த முகாம்களை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு, தங்களது 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தவறாமல் போலியோ சொட்டு மருந்து வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரிக்காக நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் மரு.எம்.அல்லி, மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.பி.வெங்கடாசலம், சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர் மரு.பா.குமரகுருபரன், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.பி.கே.ஜவகர்லால், நிலைய மருத்துவ அலுவலர் மரு.டி.ஞானக்குமார் உட்பட அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**